கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்.

முன்னிலை: திரு.A.K.மெஹபூப் அலி கான், B.L.M., LL.M., PG.D.PM/IR.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்.

2023–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 10–ஆம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண்.02/2021**

**CNR.No.TNDG01- 000056-2021**

1. வீரணன்
2. சரசு என்ற வெள்ளையம்மாள்
3. செல்லப்பாண்டி
4. பூந்தேவி
5. ராஜபாண்டி

...வாதிகள்

*எதிர்*

1. சந்திரா
2. ராமச்சந்திரன்
3. ஜெயந்தி
4. ரஜாக்

–––பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 10.07.2023ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயக்குமார் மற்றும் திரு.M.முத்துக்கருப்பன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் திரு.K.சுப்பிரமணியன் அவர்களும், 4ம் பிரதிவாதி தரப்பில் திரு.S.ராஜாங்கம் அவர்களும் ஏற்கனவே ஆஜராகியும், இன்று நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகவில்லை என்பதாலும், வாதிகள் தரப்பில் ஒத்தி வைப்பு மனு தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், வாதிகள் அழைத்தும் ஆஜராகவில்லை என்பதாலும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

தாவா சொத்தை பொறுத்து வாதிகளுக்கு அவர் அனுபவத்திலுள்ள 3/5 சரிபாதி பாகத்தை வாதிகளுக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் பிரித்து கொடுக்க ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும் மற்றும் தவறும்பட்சத்தில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து வாதிகளுக்கு எல்லை வரையறுத்து 3/5 பாகத்தை ஒப்புவிக்க இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும், தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகள் வேறு நபர்களுக்கு ஈடு, கிரையம், ஒத்தி, உடன்படிக்கை போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாதென ஒரு இடைகால உறுத்துக்கட்டளை பிறப்புவித்தும், தாவா வழக்கின் செலவு தொகையினை வாதிகளுக்கு, பிரதிவாதிகள் செலுத்தி வைக்கும் படிக்கும் வாதிகளால் சி.பி.சி.கட்டளை 7 விதி 1ன் படி பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு இன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் அழைத்தும் ஆஜரில்லை. பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் வேறு எவரும் எடுத்துரைக்கவில்லை. வாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி, ஒத்தி வைப்பு மனுவை தாக்கல் செய்தார். அந்த ஒத்தி வைப்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே இந்த வழக்கு வாதிகளின் தவறுகை காரணமாக தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

2023–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A K MEHBUB ALIKHAN
Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.07.20 17:32:34 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.